# Feminism in Contemporary Perspective

**S. Jeevalatha**
*Research Scholar*
*S.T. Hindu College, Nagercoil*

**Dr. N. Ayyappan**
*Associate Professor*
*S.T. Hindu College, Nagercoil*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255845

**Abstract**

*This article examines the status and development of feminism in contemporary Tamil research trends. While the world is formed by both genders and should function with equality, society continues to oppress women significantly. In early times, various restrictions were imposed on women, and widows were isolated. Reformers like Bharathiyar and Periyar fought for women's rights, emphasizing education, liberation, and equality. Sangam poetry and Thirukkural emphasize concepts like wifely duties, chastity, and family care. Today, women are creating new feminism through works that express their own experiences. Even now, poets and writers criticize how women lose their identity within the framework of home, husband, and children, being limited to subordinate positions. In conclusion, feminist theories identify oppression against women and pave the path for progress, believing in an egalitarian life in society.*

**References**

1. Salma., (2000), Oru Malaiyum Innoru Malaiyum (One Evening and Another Evening), Nagercoil, Kalachuvadu Publications.
2. Nagarajan. V., (Commentary), (2004), Sangam Literature - Kuruntokai, Chennai, NCBH.
3. Balasubramaniam, Ku. Ve., (Commentary), 2004, Sangam Literature - Purananuru, Chennai, NCBH.
4. Muthuchitambaram., (1997), Status of Women in India, Tirunelveli, Manonmaniam Sundaranar University.
5. Vennila. A., 2002, Adhiyil Sorkkal Irundana (In the Beginning There Were Words), Chennai, Madhi Nilayam.
6. Iniyavai Katral - Tamil Cultural Studies E-Journal.
7. https://eluthu.com/kavithai/374834.html
8. https://www.vallamai.com/?p=81388

# சம கால நோக்கில் பெண்ணியம்

***செ. ஜீவலதா***
முனைவர் பட்ட ஆய்வாளர்
தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்

***முனைவர் ந. அய்யப்பன்***
இணைப் பேராசிரியர்
தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்

**ஆய்வுச் சுருக்கம்**

*இந்தக் கட்டுரையின் நோக்கம் சமகாலத் தமிழாய்வுப் போக்குகளைப் பொறுத்து பெண்ணியத்தின் நிலைமையும் வளர்ச்சியும் பரிசீலனை செய்வதாகும். உலகம் ஆண், பெண் இருபாலினங்களாலும் உருவாகி, சமநிலையுடன் இயங்க வேண்டும் என்று அறிந்த கருத்தின் போதிலும், சமூகத்தில் பெண்கள் அதிகமாக அடக்கப்பட்டு வருவதைக் காட்டுகிறது. ஆரம்ப காலத்தில் பெண்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு, கணவன் இழந்த பெண்களை தனிமைப்படுத்தும் மரபும் நிலவியது. பாரதியார், பெரியார் போன்ற சான்றோர் பெண்கள் கல்வி, விடுதலை மற்றும் சமத்துவம் பற்றிய தீவிரமான கருத்துக்களை முன்னிறுத்தி, பெண்களின் உரிமைக்காகப் போராடினர். சங்கக் கவிதைகள் மற்றும் திருக்குறள் வழியாக மனைவி கடமை, கற்பு, குடும்ப பராமரிப்பு போன்ற கருத்துக்களை வலியுறுத்துகின்றன. பெண்கள் தங்கள் அனுபவங்களை சுயமாக வெளிப்படுத்தும் படைப்புகள் மூலம் புதிய பெண்ணியத்தை உருவாக்கி வருகின்றனர். இன்றைய காலத்தில் கூட பெண்கள் வீடு, கணவன், பிள்ளைகள் என்றமையக் கட்டமைப்பில் தன் அடையாளத்தை இழந்து, அடக்க நிலைக்கு மட்டுப்படுத்தப் படுவதை கவிஞர்களும் எழுத்தாளர்களும் விமர்சித்துள்ளனர். முடிவாக, பெண்ணியக் கோட்பாடுகள் பெண்களுக்கு எதிரான அடக்கு முறைகளை கண்டறிந்து, சமுதாயத்தில் சமத்துவ வாழ்வை நம்பி முன்னேற்றப் பாதையை வகுக்கிறது எனக் கூறப்படுகிறது.*

**முன்னுரை**

உலகம் ஆண், பெண் என்னும் இருபாலராலும் உருவாக்கப் பட்டிருக்கிறது. இரண்டும் சேர்ந்த ஒன்றே உலகம் எனப்படும். இரண்டும் ஒன்றி இயங்கினாலன்றி உலகம் நல்வழியில் நடைபெறாது என்பதனைச் சான்றோர் அறிவர். இருப்பினும் பெண் ஆணைவிடத் தாழ்ந்தவள் என்றும், ஆணின் கட்டுப்பாடுகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டு நடக்க வேண்டும் என்றும் பெண்ணின் உணர்வுகளுக்குத் தடை போட்ட சூழலில் தான் பெண்ணியம் தோன்றியது. தொடக்க காலத்தில் பெண்களுக்குச் சமூகம் பலவகையான கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. கணவனை இழந்த பெண்களுக்கு உடன் கட்டை ஏறும் வழக்கம் அக்காலத்தில் நிலவி வந்தது. கணவனை இழந்த பெண்ணுக்கு மொட்டை அடித்து, காவி உடை அணியச் செய்தது. அத்தோடு மட்டும் நில்லாமல் தனியாகப் பாய் படுக்கை, தனி வட்டில் என கொடுத்து அவர்களை மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுத்தும் நிலையும் எய்தியது. இந்நிலையை மாற்ற பாரதியார், பெரியார், திரு.வி.க. போன்ற சான்றோர்கள் கைம்மை மணத்தை வலியுறுத்தினர். மேலும் பெண்களுக்கு கல்வி அவசியம் என்றும், கல்வி கற்றப்

பெண்ணால் தான் தன் குடும்பத்தைச் சரிவர பராமரிக்க முடியும் என்றும் வலியுறுத்தினர்.

## பெண்ணியம் சொல்லாட்சி

'பெண்ணியம்' என்னும் சொல் குறித்து பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றனர். 'பெண்ணியம்' என்னும் சொல் ஆங்கிலத்திலுள்ள 'பெமினிசம்' என்ற சொல்லிற்கு இணையாக தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. இச்சொல் ஆங்கிலத்திலிருந்து எவ்வாறு மாற்றம் பெற்றது என்பதனை,

ஆங்கிலத்தில் 'feminism' என்று வழங்கும் கலைச்சொல்லையே தமிழில் பெண்ணியம் என்று கூறுகிறோம். இந்த ஆங்கிலச்சொல் பெண்ணைக் குறிக்கும். இச்சொல் 'famine' என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது. 'பெண்' என்னும் சொல்லுக்கு பெண்ணுக்குரிய இயல்புகளைஉடையவள்' என்று பொருள். பெண்ணியம் என்ற சொல் **1890** களில் இருந்து பாலினச் சமத்துவக் கோட்பாடுகளையும் குறிப்பிட்டு வருகின்றது என்று இந்தியாவில் பெண்களின்நிலை என்ற நூலில் திரு. முத்துச் சிதம்பரம் அவர்கள் கூறியுள்ளார்.

Feminism என்பதற்கு பெண் உரிமை ஏற்பு கோட்பாடு. பெண்ணுரிமை ஆதரவு என்று கூறியிருக்கும் பொருள் பொருத்தமுடையதாகும்.

அதாவது, பெண்ணிய இயக்கம் என்பது பெண்களுக்காகப் போராடும் இயக்கமாகும். பெண்ணியத்திற்கு உலகில் உள்ளஅனைத்து மக்களுக்கும் பொருந்தும்படியாகவும், முக்காலத்திற்குமுரிய ஒரு விளக்கத்தைக் கொடுக்க இயலாது. இதன் விளக்கம் ஒரு சமுதாயத்தின் வரலாறு, பண்பாடு இவற்றைப் பற்றிய உணர்வு நோக்கு, செயல் இவைகளைப் பொறுத்து மாறுபடும் என்று கூறுவர்.

## பெண்ணியத் திறனாய்வும், அணுகுமுறைகளும்

சமூக எதார்த்தத்தின் மிகப் பெரிய பரப்பளவில் பெண்ணின் நிலை சமூக தத்துவார்த்த வெளியீடுகள் எளிதாக விளக்கியிருக்கின்றனர் என்பதை பெண்ணியத் திறனாய்வுகள் நம்புகின்றன. எங்கெல்லாம் பெண்களின் நிலைப்பாடு விளக்கப்படவில்லையோ அங்கு அவர்களது நிலைப்பாட்டினை பாலியல் ரீதியான விளக்கம் செய்து சிதைத்திருக்கின்றனர். **1960** களிலிருந்து இன்றுவரை பெண்ணியம் பலரையும் பலவேறு வழிகளில் கவர்ந்திழுக்கக் கூடியதாக இருந்திருக்கிறது. உலகின் பல்வேறு பகுதிகளில் அதன் தோற்றமும், வளர்ச்சியும் வெவ்வேறு பட்ட குறிக்கோள்களை உட்கொண்டதாக இருந்தது. இந்தியாவில் பெண்கள் சதி, வரதட்சணை, உயிரோடு எரிப்பது, பால்ய விவாகம், பெண்ணைப் பாலியல் பொருளாகக் கையாளுவது, சந்தைப் பொருளாக விளம்பரங்களில் பயன்படுத்துவது, சாதிய ரீதியில் மேற்கொள்ளப்படும் அடிமைத்தனம், சுரண்டல்கள் போன்றவைகளால் ஒடுக்கப் படுகின்றார்கள்.

மற்றுமொரு நிலையில், ஆணாதிக்கச் சமுதாயம் பெண்ணைத் தாயாக, தாய்க் கடவுளாக உயர்வு நவிற்சி நிலையில் கூறி வந்திருக்கிறது. இது பெண் ஆசி வழங்கக் கூடியவள், செயல்பாட்டு நிலைக்கு உட்படாதவள் என்ற கொள்கைக்கும் சாதகமாக உள்ளன.

## சங்கக் கவிதைகள் - பெண்மயவாதம்

> **"வினையே ஆடவர்க்கு உயிரே**
> **மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என**
> **நமக்கு உரைத்தவர் தாமே" (குறு.135)**

என்ற வரிகள் கணவன், மனைவிக்குக் கடமையை உணர்த்துவதாக அமைந்து உள்ளன. மனைவியின் கடமைகள் இன்ன இன்ன என்று காலம் காலமாக நம் சமுதாயம் சுட்டிக்காட்டிக் கொண்டே இருக்கின்றது.

**மனைவி வந்தபின் குடும்பத்தின் செல்வம் பெருகியது என்ற கருத்தைக் குறுந்தொகை, ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை**

**பெரு நலக் குறுமகள் வந்தென**
**இனி விழவாயிற்று என்னும் ஊரே"**

***(குறு. 295)***

ஒரு பசு மாடு வைத்திருந்த சாதாரண குடும்பத்தில் மருமகள் வந்தவுடன் குடும்பம் திருவிழா போலப் பலரும் வந்து விருந்துண்டு போகும் இடமாக மாறிவிட்டது என்று குறிப்பிடப்படுகிறது. பெண் என்பவள் மகாலட்சுமியின் அம்சம் என்பதை சங்க காலங்களில் இருந்து இன்றளவும் மனித சமுதாயம் பெண்களுக்குள் திணித்துக் கொண்டே தான் இருக்கின்றது. ஆனால், அந்த லட்சுமி ஆனவள் கையில் பணம் வைத்து குடும்பம் நடத்துவதற்கான சாத்திய கூறுகள் இருக்கின்றதா? என்பதே கேள்வியாகிறது.

கணவனை இழந்த பெண்ணின் நிலைமையை இன்னும் சிறப்பாக சங்கக் காலப் பாடல் எடுத்துரைக்கிறது. தாயங் கண்ணியார் தம் பாடலில் கணவன் இழந்த பின் மனைவி, கைம்மை ஏற்றுக் கூந்தல் கொய்து, வளையல் நீக்கி அல்லியரிசியாகிய உணவுண்ணும் நிலையைக்,

**கூந்தல் கொய்து, குறுந் தொடி நீக்கி,**
**அல்லி உணவின் மனைவி (புறம். 250)**

என்று காட்டுகிறார். இவ்வாறு, தன் கணவனால் அல்லாமல் பிறரால் தொடப் படாத கூந்தலை எடுப்பதும் பண்டைய மரபாகிறது.

பெண்ணை முன்னிறுத்தி போர் முறைகளும் நடைபெற்றுள்ளன. குன்றூர் கிழார் மகனான் தனக்கு அடிமையாகாத வீரனைத் தன் மகளுக்குத் திருமணம் முடிக்க மறுக்கும் செயலைத் தன் பாடல் வழி விளக்குகிறார். இதில் வெற்றியை உடைய மூவேந்தர்களும் மறக்குடி மகள் வேண்டி வீரனிடம் வந்த போதிலும், தன்னுடைய தகுதிக்குத் தக்கவாறு தன்னை வணங்காதவர்க்குத் தன் மகளை இவ்வீரன் (மகட்கொடை) மணம் செய்து கொடுக்க மறுப்பதை,

**"கொற்ற வேந்தர் வரினும், தன்தக**
**வணங்கார்க்கு ஈகுவன் அல்லன்"**

***(புறம்.338)***

என்கிறார். இதில் 'தான்' என்ற அகந்தைக்கு, ஆணின் ஆணவத்திற்குப் பெண் பணயப் பொருளாக்கப்படுவதைக் காணலாம்.

## திருக்குறள் வழி அறியலாகும் பெண்ணியம்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறள் பெண்ணியம் பேசுகிறது. அஃதாவது,

**"மனைத் தக்க மாண்புடையாளாகித் தற்கொண்டாள்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை**

***(குறள். 7)***

என்கிறது. அதாவது குடித்தனத்துக்கு ஒத்த பெருமையுடையவளும், தன் கணவனுடைய வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்கிறவளுமான மனைவியே சரியான வாழ்க்கைத் துணைவி என்கின்றார் வள்ளுவர். மேலும்,

**"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மை உண்டாகப் பெறின்"**

***(குறள். 54)***

அதாவது கற்பு என்ற மன உறுதியுள்ள பெண்ணைக் காட்டிலும் பெருமை தரக்கூடிய பொருள் இவ்வுலகத்தில் வேறு என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை என்கிறார். மேலும் இவர் குடும்பம், கற்பு இரண்டும் பெண்ணிற்குத் தேவை என்றும் வலியுறுத்துகின்றார்.

## பெண்ணியம் முழக்கங்கள்

### பாரதியார்

தேசியப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்ற பாரதியார் பெண் கல்வி, பெண் விடுதலை குறித்து எழுதிய கவிதைகள் தமிழ் இலக்கியத்தில் பெண்ணியக் கூறுகளை அறிவதற்கான சான்றுகளாகத் திகழ்கின்றன.

***'நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்"***

***(புரட்சிப்பெண் பா.எ.4)***

*என்று சாடுவதோடு நில்லாமல்,*

***"மாதர் தம்மை இழிவு செய்யும்***
***மடைமையைக் கொளுத்துவோம்"***

***(புரட்சிப்பெண்- பா.எ.7)***

*என்றதோடு,*

***"ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம்"***

***(புரட்சிப்பெண் பா.எ.4)***

*என்றும் கூறுகின்றார். இவ்வாறாக பாரதியாரின் கவி வரிகளின் மூலம் பெண்களின் முன்னேற்றத்திற்கான பாதையை வகுத்தார் என்று கூறினால் அது மிகையாகாது. இதனால் தான் பாரதியின் கவிதைகள் வரலாற்றில் நிலைத்த இடத்தைப் பெறுகின்றன.*

## பெரியார்

*பெண் விடுதலை குறித்து எழுந்த சீர்திருத்த இயக்கங்களில் பெரியாரின் சுயமரியாதை இயக்கமானது பெண் என்பவள் ஆணின் போகப் பொருள் என்பதை மறுத்து, ஆணின் பாதி என்பதை மாற்றி பெண்ணினம் தன்னை முழுமையாகப் புரிந்துகொள்ள உதவி செய்தது. பெரியாரை தமிழ் இலக்கியப் பெண்ணிய முன்னோடி எனக் கூறலாம்.*

*அவர், 'பெண்களைக் கணவனுக்கு நல்ல பண்டமாக மாத்திரம் ஆக்காமல், மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றவும், புகழ் பெறும் பெண்மணியாகவும் வேண்டும் பெண்ணும் தன்னை பெண்ணினம் என்று கருத இடமும் எண்ணமும் உண்டாகும் படியாக நடக்கவே கூடாது. நமக்கும், ஆணுக்கும் ஏன் பேதம்? ஏன் நிபந்தனை? ஏன் உயர்வு தாழ்வு? என்ற எண்ணம் ஒவ்வொரு பெண்ணுக்கும் எழவேண்டும். ஏனெனில் பெண் என்பவள் வெறும் போகப் பொருளாக ஆக்கப்படுதல் கூடாது. அவர்கள் புது உலகைச் சித்தரிக்க வேண்டும்" என்றெல்லாம் பெரியார் தம்முடைய பொதுவுடைமைச் சிந்தனைகளாக வலியுறுத்துகின்றார்.*

***"இவ்வாறாகப் பாரதி, பெரியார் மட்டுமல்லாது இன்னும் பல அறிஞர்களும் கவிஞர்களும் பெண் முன்னேற்றத்திற்காகவும் பெண் கல்விக்காகவும் பாடுபட்டனர்.***

***"என்ன குற்றம் புரிந்தாய் நீ***
***தலைகுனிந்து நடப்பதற்கு?***
***நேராகச் சீராகப் பார்***
***நேசனைத் தேர்ந்தெடு***
***நீசரைப் பார்வையால் சுட்டெரி***
***தேவைப்பட்டால் துப்பாக்கி***
***ஏந்துவதற்கும் தயங்காதே"***

***(இ.சு.துரைசாமி)***

*என்று கூறுவதிலிருந்து பெண்களின் பழைய மரபுக் குணங்கள் தகர்க்கப்பட வேண்டும் என்பதோடு அவற்றுக்காகப் போராடும் சூழ்நிலை வந்தால் துப்பாக்கி ஏந்தவும் தயங்கக் கூடாது என்கிறது இக்கவிதை இவ்வகையில் பெண் உரிமைக்காக இயக்க அளவில் பெண் விடுதலை கருத்துக்களும் பெண்ணுரிமை முழக்கங்களும் தமிழ்க் கவிதைகளில் பரவலாக இடம் பிடித்தன எனலாம்.*

## பெண் கவிஞர்களின் பார்வையில்...

*பெண்ணியத்தின் தீவிரப் போக்கை, அண்மைக் காலங்களில் ஆண், பெண் படைப்பு மொழியாக இருந்த போதிலும் பெரும்பாலும் பெண்ணின் புறச்சூழல் சார்ந்த கருத்தாடல்கள் முன்னிறுத்தப்பட்டு வருகிறது. இதன் தேவையை உணர்ந்த பெண்ணியவாதிகள் பண்பாட்டுச் சூழலில் உருவாக்கப்பட்ட பெண் படைப்பில் மாற்றத்தைக் கொண்டு வர தீவிரமாக முனைகின்றனர். பெண்கள் தங்களுக்கான அனுபவங்களை, அகத்தை, தன் படைப்பின் இலக்காகக் கொண்டனர். இலக்கின் விளைவாகத் தங்களின்அந்தரங்க வலிகளைப் பதிவு செய்யும் போக்கை இலக்கியமாக்கி வருகின்றனர்.*

குடும்பத்தின் அதிகார அமைப்பில் மாற்றம் வராமல், பெண் விடுதலை என்பது சாத்தியப்படாது. எனவே, வீடு என்ற அமைப்பிற்குள் சுயம் இழந்து தன் அடையாளத்திற்கான பாதுகாப்பின்மையை வேதனையோடு 'பயணத்திற்குப் பிந்தைய வீடு' என்ற கவிதையில் காட்டுகிறார் சல்மா,

***"கற்காலக் குகையொன்றின்***
***தோற்றமாகவோ***
***சிறைச்சாலையொன்றின் சாயலாகவோ***
***இல்லாமல்***
***வீடு வீடாக இருப்பது***
***அதனுடன் தொடர இயலாத உறவாய்***
***மாறி***
***மிகுந்த சங்கடத்தைத் தருகிறது.***
***மிகுந்த சங்கடத்தைத் தருகிறது.***
***என் பொழுதும்***
***என் மனப் பிறழ்வும்***
***ஆரம்பமாவது***
***இந்த வீட்டின் ஒழுங்குகளுக்குள்***
***(பக். 38-39, 2000)***

வெளிப்பார்வைக்குக் கடினமாகத் தெரியாதது வீடு. ஆனால் வீட்டின் உறவு மனப்பேதலிப்பிற்குக் காரணமாவதை வேதனையோடு முன் வைக்கிறார்.

குடும்ப அமைப்பில் அனாதரவான நிலைபோல உணரப்படும் தனிமையை வெளிப்படுத்தும் இடமாக வீடு உள்ளதாக "ஆதியில் சொற்கள் இருந்தன" என்ற கவிதைகள் காட்டுகிறார் வெண்ணிலா,

***"ஆளில்லா அறைகளில்***
***ஒலித்தடங்கும்***
***தொலைபேசி அழைப்புகள்***
***சொல்லாமல் சொல்லும்***
***செய்திகளை***
***அறிய இயலா ஏக்கத்தில்***
***அலையும் அவர்களின் கனமான***
***பெருமூச்சுக்கள்..." (பக்கம், 35 2002)***

பெண் கவிஞர்களின் பார்வையில் வீடு தனிமைச் சிறையாக இருந்தாலும் அதில் பெண் நிலைப்பாடு வேதனையின் வெளிப்பாடாக உள்ளது. 'வீடு', 'அறை' என்ற வெளிகளில் தங்கள் இருப்புகளைப் பெண் மொழியாகப் பேசுவதைக் காணலாம்.

அன்றைய நாட்களிலிருந்து உலகையே புரட்டிப் போடும் இன்றைய விஞ்ஞான வளர்ச்சிப் பெற்றிருந்த காலத்திலும், ஒரு பெண்ணுக்கு, வீடு, கணவன், பிள்ளைகள் என்ற நெறியே வாழ்வின் மையக் கருத்தாக இருந்து வருகிறது. பெண்ணின் வாழ்க்கையில் இன்று புதிது புதிதாக முளைத்திருக்கும் சிக்கல்கள் எல்லாமே இந்த மையக்கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான் அமைகின்றன. தெய்வத்தைக் காட்டிலும் ஒரு பெண்ணுக்கு கணவன் மட்டுமே மேலானவள். அப்படிப்பட்டக் கணவனை மகிழ்வித்து, அவனுக்கு தேவையானவற்றை செய்து கொடுத்து அவனால் பெற்றிருக்கும் வாழ்வுக்கு எவ்வித பங்கமும் வராமல் வாழ்ந்து நன்றிக் கடன் செலுத்தக் கூடியவள் பெண் என்னும் நிலைக்குத் தள்ளப்படுகின்றாள்.

## முடிவுரை

பெண்ணின் தகுதி நிலை என்பது ஆணின் சார்பாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கல்வி, அரசியல், பொருளாதாரத்துறைகளில் பெண் தனித்து நின்றும், குழுவாகச் சேர்ந்திருந்தும், பொது நிலையிலிருந்தும் ஆற்றக்கூடிய வாழ்க்கைப் பணிப்பகிர்வு ஆணின் குடும்ப முன்னேற்றம் கருதியதாக இருக்கிறது. பெண்ணிய கோட்பாடுகள் குறித்து பல அறிஞர்கள் மொழிகின்றனர். பெண்ணியம் குறிப்பாக பெண்களுக்கு எதிரான அடக்கு முறை, சுரண்டல் முறைகளை உணர்ந்து கொய்யவும் பெண்ணியம் தெளிவான விவரங்களை முன் வைக்கிறது எனலாம்.

## துணை நூற்பாட்டில்

1. சல்மா., (2000), ஒரு மாலையும் இன்னொரு மாலையும், நாகர்கோவில், காலச்சுவடு.

2. நாகராஜன்.வீ, (உரை), (2004) சங்க இலக்கியம் குறுந்தொகை, சென்னை, என்சிபிஹெச்.
3. பாலசுப்பிரமணியன், கு.வெ., (உரை) 2004, சங்க இலக்கியம் புறநானூறு, சென்னை, என்சிபிஹெச்.
4. முத்துச்சிதம்பரம்.,(1997), இந்தியாவின் பெண்களின் நிலை, திருநெல்வேலி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம்.
5. வெண்ணிலா. அ, 2002, ஆதியில் சொற்கள் இருந்தன, சென்னை, மதி நிலையம்.
6. இனியவை கற்றல் பண்பாட்டு தமிழியல் மின்னிதழ்.
7. https://eluthu.com/kavithai/374834.html
8. https://www.vallamai.com/?p=81388